18 FEB 2000
யாழ்ப்பாண

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 06 வெள்ளிக்கிழமை ( 18 - 02 - 2000 ) *VALAMPURI* ஒலி: 61

## சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் சைக்கிள் திருட்டு

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவரின் துவிச்சக்கரவண்டி ஒன்று பட்டப்பகலில் திருடனின் கைவரிசைக்கிலக்கான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி சந்திக் கருகாமையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறை வீதிக்கு கிழக்குப் புறமாக கொக்குவில், தலையாழி, கலட்டி பகுதிகள் இராணுவத்தினரால் சுற்றிவளைத்து வீடுகளில் உள்ளவர்களை நாச்சிமார் கோவிலுக்கு அழைத்துவரப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

திருட்டுப்போன சைக்கிள் தொடர்பாக இராணுவம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் கொக்குவில் சந்திப் பகுதியில் உள்ள வர்த்தகர்களிடமும் சைக்கிள் காணாமல்போனது தொடர்பாக விசாரணைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## விளையாட்டுப்போட்டி பார்த்த மாணவன் ஈட்டி வீச்சுக்குப் பலியானார்

(வவுனியா)

இல்லமெய்வல்லுநர் போட்டியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் மீது போட்டியில் ஒருவர்வீசிய ஈட்டி பாய்ந்து குத்தியதில் அந்த மாணவன் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று வவுனியா செட்டிகுளம்பகுதியில் நடைபெற்றுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இணைசெட்டிகுளம் முஸ்லீம்மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டிகளின் போது ஆண்டு 11ல் கல்விகற்கும் 16வயது மாணவன் கபீர் முகமட் ஹம்சீன் என்பவரே ஈட்டி வீச்சுக்குப் பலியானவராவார்.

ஈட்டி வீச்சுப் போட்டியில் கலந்து கொண்டபோட்டியாளர் ஒருவரின் ஈட்டி குறிதவறிப்போய் பார்வையாளர் பகுதியில் இருந்த ஹம்சீன் தலையிலும், பிடரியிலும் காயத்தை ஏற்படுத்தி உயிரைப்பறித்தது. (வ)

# சமாதானப் பணி கடினமாயினும் நோர்வே அதனைச் செய்ய தயார்!

## நோர்வே அமைச்சர் தெரிவிப்பு

(லண்டன்)

**இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று தான் தீர்வாக இருக்க முடியும். யுத்தத்தின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.**

**இரு துருவங்களில் தங்கள் நிலைப்பாட்டைக் கொண்டுள்ள விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் இணக்கப்பாட்டை கொண்டு வருதல் மிகவும் கடினமான பணியாக இருக்கும்.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் நோர்வேயில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இலங்கையில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிராண்ட்பாஸில் நேற்று அதிகாலை நடத்திய தேடுதலில் 20 தமிழர் கைது!

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது 20 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 20 தமிழர்களும், பொலிஸில் தம்மைப் பதிவுசெய்யாதவர்களும், பதிவுகளைப்புதுப்பிக்காதவர்களும், மற்றும் சந்தேகத்தின் பேரிலுமேயே இவர்கள் கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கிராண்ட்பாஸ் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இவர்களின் கைது தொடர்பாக கொழும்பு மாவட்ட தேசியப்பட்டியல் எம்.பியான ஆர். யோகராஜன் கைது செய்யப்பட்டவர்களை நேரில்சென்று பார்வையிட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### எட்டாவது நாள் உண்ணாவிரதத்தில்

# யுத்தக் கைதிகளில் ஏழு பேரின் நிலை கவலைக்கிடம் அரசு நடவடிக்கை எடுக்காவிடின் விளைவு பாரதூரம்!

(வவுனியா)

நான்கு நாட்களுக்குள் தமது விடுதலை குறித்து அரசு நடவடிக்கை எடுக்கத் தவறின் தமது உடல் நிலை பாதிக்கப்பட்டு தாம் உயிரிழக்க நேரிடும் என சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி முதல் 174 மணித்தியாலங்களுக்கு மேலாக வன்னியில் உண்ணாவிரதமிருக்கும் இவ் யுத்தக் கைதிகளை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மருத்துவர் குழு பார்வையிட்டது. இவர்களில் 7 பேரின் நிலை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை தமது பெற்றோர் தம்மைப் பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதித்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த கைதிகள் தம்மைப் பார்வையிடமட்டும் வருவதுடன் நின்றுவிடாமல் தமது விடுதலை குறித்து அரசின் பதிலை எடுத்து வருவது பயனுள்ளதாக இருக்கும் என்றும் இல்லாவிட்டால் பார்வையிடவருவோர் தமது இறந்த உடல்களை

(6-ஆம் பக்கம் பார்க்க

## தென்மராட்சி உசன் பகுதியில் ஷெல் வீச்சு நால்வர் காயமடைந்தனர்

[யாழ்ப்பாணம்]

நேற்றுப் பிற்பகல் 6மணியளவில் உசன் கந்தசுவாமி கோவிலடிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கருகில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் மா. சசிரேகா [வயது 20], சு. மணிராஜ் [வயது 42], அவரது மகன் ம. விஜேந்திரன் (வயது 11), ஆகியோர் காயமுற்றனர், இவர்களில் விஜேந்திரன் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை நேற்றுப் பிற்பகலில் வெள்ளாம் போக்கட்டிப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் இ. ஜனாத் (வயது6) என்ற சிறுவன் காயமடைந்தார். காய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த 13 ஆம் திகதி முலவைச் சந்தியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட குருநகரை சேர்ந்த கொன்சன்ரயின் றொசான் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவரின் கைது குறித்து புளொட் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அறுபத்தேழு வயது மூதாட்டி புலிச் சந்தேகநபர் என கைதாகி விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு கல்கிசைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மூதாட்டி ஒருவர் பின்னர் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

கடந்த 12ம் திகதி காலை 5.30மணியளவில் கொழும்பு, தெகிவளைப் பகுதியில் சிவில் உடையில் வந்தவர்கள் தன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகல விதமான ஓவிய வேலைகள் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் பாடசாலைச் சின்னம், கீற்றேக் ஆகியவற்றை செய்திட S.S. யசோதரன் ஆ ஸ் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி-030)

# வறுமையில் வாடுவோரின் வாழ்வை முன்னேற்றுவதே எமது குறிக்கோள்

## மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் தெரிவிப்பு

(ஈச்சமோட்டை)

வறுமையில் வாடும் மக்களுக்கு அவர்கள் வாழ்க்கையை முன்னேற்றும் முகமாக சாதி, மதம், இன, மொழி வேறுபாடின்றி செயற்படுவதே எமது நோக்கம் என யாழ், கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனமான மனித முன்னேற்ற நடுநிலையத்தின் யாழ். இயக்குநர் அருட்தந்தை எஸ். ஜெயக்குமார் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் எமது பிரதான கிளை யாழ்ப்பணத்திலும் அதன் இன்னோர் கிளை வன்னியிலும் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக இடம் பெயர்ந்த வீடுவாசலற்ற மக்களுக்கும், தொழில்களை இழந்தோருக்கும், வறிய மாணவர்களுக்கும் விதவைகளுக்குமாக எமதுபணி செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் எமது பணிகள் பல்வேறு வகையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் அவர்களின் போர்ப் பாதிப்புக்கேற்ப அதை நிவர்த்தி செய்து சுயமாக தொழிலில் ஈடுபட சுழற்சிமுறைக் கடன்களையும் மீன்பிடி, விவசாய உபகரணங்களையும் வழங்கியுள்ளோம். இதனால் மக்களும் எம்முடன் இணைந்து செயற்பட்டு பெற்ற கடனை மீள அளிக்கும் மனப்பாங்கு கொண்ட கலாச்சாரபோக்குடையவர்களாக மாறியுள்ளனர். அத்துடன் தங்கிவாழும் கலாச்சாரக்தை விட்டு சுயமாக வாழும் கலாச்சாரத்தை பின்பற்ற முயல்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 'சகோதர பகிர்ந்துவாழ்வுச் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி செயற்படுத்தி வருகின்றோம். அத்துடன் விதவைகளுக்கும் தனியான அமைப்பு ஏற்படுத்திஉதவி புரிகின்றோம்.

இதுவரை யாழ்ப்பாணத்தில் 60 பாலர் பாடசாலைகளை நிறுவி அதன் மூலம் பாலர்கல்வியை மேம்படுத்தியுள்ளோம்.

போரினால் பாதிப்புற்ற மாணவர்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும்அவர்களின் மனஉழைச்சலைப் போக்கும். முகமாகவும் குடும்ப உறவுகளை பேணும் முகமாகவும் 'சாந்திகம்' 'அகவொளி' போன்ற அமைப்புக்கள் மூலம் அறிவுரைகள் வழங்கி வருகின்றோம்.

இதற்கான உதவிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நோர்வே அமைப்பு மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றோம்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக, கல்விப் பொதுத்தராதர சாதாரண, உயர்தர மாணவர்களுக்கும் உதவிகளை வழங்குகின்றோம்.

★ வன்னி மாவட்டத்தின் கிளிநொச்சி, முல்லைப்பகுதி பாடசாலைகளில்12ஆயிரத்து 700 மாணவர்களுக்கு நாள் தோறும் மதிய உணவாக இலைக்கஞ்சி வழங்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

அதைவிட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதிகள், சுயதொழில் ஊக்குவிப்பு போன்ற திட்டங்களையும்நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

வன்னியில் 36 பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வியறிவூட்டப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலை உப உதவியாளர்களான 96 பேருக்குதொண்டராசிரியர்களுக்கான 107 பேருக்கும் மாதம் ஒன்றிற்கு தலா 500 ரூபா வீதம் வழங்கிஊக்குவிக்கின்றோம்.

சென்றவாரமும் 150 விதவைகளுக்கு அவர்களின் சுயதொழில்வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக தலா 5000 ரூபா வழங்கியுள்ளோம்.

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் கனடாவின் 'சீடா' உதவித் திட்டத்துகமைய சுயவேலை வாய்ப்க்களையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகிறோம்.

எமது பணிகள் பாதிக்கப்பட்ட எந்த ஒரு மனிதனையும்முன்னேற்றுபவையாகவே அமைய வேண்டுமென விரும்பி செயல்படுகிறோம்.

இதில் எதுவித சாதி,மத, இன, மொழி வேறுபாடும் கிடையாது நாம் அனைவரும் மனிதர்களே கைகோர்த்து நாளைய உலகைப் புதிதாய்ப் படைக்கப்புறப் படுவோம் என்றார். (க-59)

# (இராசி பலன்)

18.02.2000
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு மாசி 06)

சதுர்த்தசி நள்ளிரவு 12.48 வரை, பூசம் நண்பகல் 1.00 மணிவரை, மரண யோகம், இராகுகாலம் காலை 11.33 முதல் 1.01 வரை, சுபநேரம் காலை 7.01 முதல் 8.31 வரை.

**மேடம்:**
தொழில் கஸ்டம், அதிக செலவு, மனசஞ்சலம்.

**இடபம்:**
காரிய அனுகூலம், பழையஉறவு, உல்லாசம்.

**மிதுனம்:**
குடும்பத்தகராறு, வாக்குக் கலகம், அலைச்சல்.

**கடகம்:**
புதியசிந்தனை, பண வரவு, பொதுப்பணி.

**சிங்கம்:**
முட்டுக்கட்டை, அதிகாரி சினம், வைத்தியசெலவு.

**கன்னி:**
உயர்ந்தஸ்தானம், கடித அனுகூலம், விவாதம்.

**துலாம்:**
பயனற்ற செயல். தொழில் பாராட்டு. தெய்வதரிசனம்.

**விருச்சிகம்:**
தந்திரோபாயம், மாமனார் கவலை, பணமுடை.

**தனுசு:**
சபலபுத்தி, பெண்பகை, முட்டிமோதல்.

**மகரம்:**
இனியசம்பவம், திருமண யோகம், சுபநிகழ்ச்சி.

**கும்பம்:**
தொழில் முதலீடு, கடன் வசூல், கலகலப்பு.

**மீனம்:**
காரியத்தடை, சென்றஇடத்தில் விரோதம், மனக் குமுறல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## தடைவிதிப்பு

(அச்சுவேலி)

முழக்கன் இந்து பொது மயானப் பகுதியில் சட்ட விரோதமாக மண் அள்ளப்படுவது அச்சுவேலி பிரதேச சபையின் முயற்சியினால் தடைசெய்யப்பட்டுள்ளது. (க-57)

# விளையாட்டுச் செய்தி

### சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்போட்டி

## பாகிஸ்தான் அணியை இலங்கை அணி முப்பத்திநாலு ஓட்டங்களினால் வெற்றி

பாகிஸ்தானில் நேற்று முன் தினம் நடைபெற்ற இரண்டாவதுஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 34ஒட்டங்களால்பாகிஸ்தான் அணியை வென்றுள்ளது

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 263 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இலங்கை அணி சார்பில் சனத்ஜெயசூரிய மாவன் அத்தபத்து ஆகியோர் முறையே 65,57 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45.1ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. யூசப் யுகானா வசீம் அக்ரம் ஆகியோர் முறையே 68, 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் சனத் ஜெயசூரிய ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த ஆட்டத்தையும் வென்றதன் மூலம் 2-0 என்ற கணக்கில் இங்கைஅணி முன்னணியில் உளளது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

[கரணவாய்]

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ். சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறை இணைப்பாளர் செல்வி இ.தேவரஞ்சினி பிரதம விருந்னராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கவுள்ளார். (க-27)

★ ★ ★

[பொலிகண்டி]

கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி. ப.2மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

(யாழ்ப்பணேம்)

யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட,பீடாதிபதி மா. நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இராஜகோபாலும் கௌரவ விருந்தினராக புவனியார் ஆலய பங்குத்தந்தை ஆர்.எம்.ஜி. நேசநாயம் அடிகளாரும் கலந்து கொள்கின்றார்கள். (க-5)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நாளைசனிக்கிழமை இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி. கிருஷ்ணதாஸ் தலைமையில் இடம் பெறுகின்றது. (க-82)

## இன்றைய போட்டிகள்

(கரணவாய்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று நடைபெறும் போட்டி விபரம் பின்வருமாறு 17வயதுப்பிரிவு நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம் எதிர் சோமஸ்கந்தா கல்லூரி யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் கோப்பாய் மகா வித்தியாலயம் 19வயதுப் பிரிவு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

இப் போட்டிகள் யாவும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-27)

## நீதி நூல் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடா ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் வருடந்தேறும் நடாத்தப்படும் நீதி நூல் மனனப் போட்டியும், செயல் முறைப்போட்டியும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

தரம் 1, 2, மாணவர்களுக்கான நீதிநூல் மனனப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

மத்தியபிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான கோலம் போடுதல், மாலைகட்டுதல் தோரணம்பின்னுதல் ஆகிய செயல் முறைப்போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டிகளில் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த 800ற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-5)

## இன்றைய கிரிக்கெட் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டியில் இன்று 18-ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம் பெறும்.

## யூனியன் மாணவர்கள் சாதனை

[யாழ்ப்பாணம்]

சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய யா/யூனியன் கல்லூரி மாணவர்கள் செல்வன் கே. பார்த்தீபன் முதலாம் இடத்தையும், செல்வன் எஸ. விஜிந்தன் மூன்றாம் இடத்தையும் பெற்றதன் மூலம் ஜனாதிபதி பரிசைத் தட்டியுள்ளனர்.

இச்சித்திரப் போட்டி நீதி அரசியலமைப்பு இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சினால் வட-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. (க-5)

## நீதிமன்ற செயற்பாட்டிற்கென மன்னாரில் புதிய கட்டடங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நீதிவான்மன்று மற்றும் மாவட்ட நீதிமன்று ஆகியவற்றிற்கான புதிய கட்டடங்கள் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச் செய்திகள் மேலும் தெரிவிக்கையில்:

மன்னார் மாவட்ட நீதிபதி மா. இளஞ்செழியன், பிரதம நீதியரசரை கேட்டுக்கொண்டதக்கிணங்கவே மேற்படி கட்டடங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

ஒருகோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. 6 மாத காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகி விடும் என நம்பப்படுகிறது.

தற்போது இயங்கும் மாவட்ட நீதிமன்றக் கட்டடம் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருப்பதனாலேயே புதிய கட்டடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## வீதி உலா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வீதி உலா நாளை 19ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (க-24)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## கண்காட்சி

(நெல்லியடி)

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்பட்ட தையல், கேக் ஐசிங், பூவேலை, தலைஅலங்காரம், தலைமைத்துவம் ஆகிய பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களின் கைப்பணிப் பொருட்காட்சி மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலக மண்டபத்தில் இன்றும்நாளையும் இடம்பெறவுள்ளது.

(க-18)

## கொட்டடியில் நூலகம் திறப்பு

(தீவகம்)

யாழ்ப்பாணம் கொட்டடியில் புனரமைக்கப்பட்ட கொட்டடி சனசமூக நிலைய கட்டடத்திறப்பு விழா நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற விருக்கின்றது.

இந்த சனசமூக நிலையம் புனரமைப்பதற்கான நிதியினை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களால் ரூபா ஐம்பதினாயிரம் ஒதுக்கி கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## நாளைதேர்

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தசுவாமியார் ஆலய தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை இடம் பெறுகின்றது.

கடந்தகால வன் செயல்களுக்குப்பின்னர் இந்த வருடம் கும்பாபிஷேகம் நடைபெற்று, இடம் பெறும் முதல் தேர்த் திருவிழா இது என்பது குறிப்பிடத்தக்கது. (க-82)

# பல்கலைக்கழக மகளிர் மன்றம் யாழ். மண்ணில் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக பெண் விரிவுரையாளர்கள். பாடசாலை அதிபர்கள், பட்டதாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய பல்கலைக் கழக மகளிர் மன்றம் ஒன்று கடந்த ஆண்டின் இறுதிப் பருதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் அமைப்பில் 106 விரிவுரையாளர்கள், 21 பாடசாலை அதிபர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 179 பட்டதாரிகள் உள்ளடங்குகின்றனர்.

மேற்படி மன்றத்தின் தூர இலக்கு சமுதாய பூரணத்துவத்தை நோக்காகக் கொண்டது எனவும் குறிக்கோள் பல்கலைக்கழக மகளிர் பங்களிப்பின் ஊடாக சமுதாய அபிவிருத்தி என்பதாகவும். உச்ச இலக்கு - நிலைத்து நிற்கும் சமுதாய மாற்றத்தை உயரிய இலட்சியங்களைக் கொண்டது என்றும் அவ் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-2)

## கஞ்சா செடிவளர்ப்பில் ஈடுபட்டவர் மதுவரி திணைக்களத்தினரால் கைது

(பருத்தித்துறை)

புலோலி உபகதிர்காமப் பகுதியில் கஞ்சா செடிவளர்ப்பில் ஈடுபட்டிருந்த ஒருவரை வடமராட்சி மதுவரித் திணைக்களத்தினர் அண்மையில் கைதுசெய்தனர்.

வீட்டு வளவில் உள்ள வாழைத்தோட்டப் பகுதியில் வளர்க்கப்பட்டிருந்த சுமார் ஒரு அடி உயரமுள்ள 70 கஞ்சா செடிகளையும் 140 கிராம் கஞ்சா தூளினையும் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. நா. சோதிநாதன், மதுவரி உத்தியோகத்தர் எஸ். சிவநாதன் இருவரும் கண்டுபிடித்தனர்.

பிரஸ்தாப நபர் பருத்தித்துறை நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் தண்டப்பணமாக 10, ஆயிரம் ரூபா அறவிடுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் ஈ. ஏகநாதன் தீர்ப்பளித்தார்.

(க-11)

வடமராட்சிப் பகுதியில்

## முறைசாராக் கல்வி பயிற்சிப் பரீட்சைக்கு தோற்றாதோர் உடன் தொடர்பு கொள்ளவும்

[மந்திகை]

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சியை மேற்கொண்டும் பரீட்சைக்கு தோற்றாத மாணவர்கள் தாம் பயிற்சி பெற்ற பாடசாலை அதிபர் ஊடாக மேற்படி பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு செயற்திட்ட அலுவலர் வே. அம்பிகைபாகன்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த வருடம் மேற்படி பிரிவில் பயிற்சியை மேற்கொண்ட பலர் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றி எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றவில்லை.

மேலும் சிலர் மொழித் திறன் பரீட்சைக்கு தோற்றி செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு மீண்டும் பரீட்சையை நடாத்தி சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (க-23)

## டிப்ளோமா விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சையில் தோற்றவுள்ள சகல ஆசிரிய மாணவர்களையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி. த. வில்வநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-1)

## வதிரியில் விற்பனை நிலையம் திறப்பு

(பருத்தித்துறை)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் [UNDP] நிதியுதவியுடனும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடனும் வதிரியில் உற்பத்தி செய்யப்படும் தோற் பொருட்களின் பாதணிகள் விற்பனை நிலையமொன்று தும்பளை வீதியில் பருத்தித்துறை தபால் கந்தோருக்கு அருகாமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இப் பாதணிகள் விற்பனை நிலையத்தை கடந்த புதன் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி. நடராஜலிங்கம் திறந்து வைத்தார்.

(க-11)

இந்தியாவை பொறுத்தவரையில்

# பாராளுமன்ற ஆட்சியை காட்டிலும் ஜனாதிபதி ஆட்சியே பொருத்தம்

## சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவைப் பொறுத்த வரையில் பாராளுமன்ற ஆட்சிமுறையைக் காட்டிலும் முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரமுள்ள ஓர் ஜனாதிபதி ஆட்சிமுறையே மிகவும் பொருத்தமானது என்று நுகர்வோர விவகார பொது விநியோகத்துறை அமைச்சர் சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் சட்டத்தை மறுபரிசீலனை செய்யும் அரசின் யோசனைகளைப் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி கடுமையாக எதிர்த்து வருவது, பிளவுபட்டு திசைதெரியாது நிற்கும் அக் கட்சி செய்யும் ஓர் வரலாற்றுத் தவறாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா தொடரும் பிரச்சனைகளைசமாளிப்பதற்காக மேற் கொள்ளளும் அணுகுமுறைகளைதாமதமாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படும் கூற்றிற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சரின் மேற்கண்ட பதில் அமைந்ததாக அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-7)

## இந்தியாவை வாழ்த்திப் பாடிய நடிகைக்கு பாக். அரசு தேசத்துரோகக் குற்றச்சாட்டு

[இஸ்லாமபாத்]

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியொன்றின் போது இந்தியாவை வாழ்த்திப் பாடிய பாகிஸ்தானிய நடிகை ஒஸிமா மீது தேசத்துரோக வழக்கை பாகிஸ்தான் அரசு தொடுத்துள்ளது.

பாகிஸ்தானியதிரைப்படங்களில் கவர்ச்சி வேடங்களில் நடித்து வரும் இந்த நடிகை பெருமளவில் இரசிகர்களைக் கவர்ந்துள்ளவர் என்பதால் இவருடைய கருத்து பொது மக்கள் மத்தியில் பலமான தாக்கத்தை உண்டு பண்ணும் என்று அவரது ரசிகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(க-7)

# செச்னிய தலைநகர் குரோஷ்னிக்குள் பொதுமக்கள் நுழைய தடைவிதிப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய படையினரால் கைப்பற்றப்பட்ட செச்சினிய தலைநகர் குரொஷ்னிக்குள், வரும் முதலாம் திகதிவரை பொதுமக்கள் எவரும் உள்நுழையக் கூடாதென அங்கு நிலை கொண்டுள்ள ரஷ்ய படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

குரொஷ்னி, பொதுமக்களின் நடமாட்டத்துக்கு ஆபத்தான ஓர் இடமாக தற்போது விளங்குவதனாலேயே மேற்படிதடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக குரோஷ்னிக்குப் பொறுப்பாகவுள்ள ரஷ்ய இராணுவத்தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குரொஷ்னி நகரத்தில் பல கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாலும், வெடிக்காத நிலையில் பல ஷெல்கள் இன்னமும் அங்கு காணப்படுவதாலும், கட்டடங்கள் பல இடிந்து விழும் ஆபத்து நிலையில் உள்ளதாலுமே பொது மக்கள் செல்வதற்குத் தாம் தடைவிதித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்கள் என்ற போர்வையில் பல செச்சினியப் போராளிகள் குரொஷ்னிக்குள் புகுந்துள்ளதாகவும், அப்படியான 92 பேரை இதுவரை ரஷ்ய தரப்பினர் கைது செய்திருப்பதாலுமே மேற்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக வேறு செய்திகள் தெரிவித்துள்ளன.

(க-9)

## உலக வலம்

## இலண்டனில் பேச்சுவார்த்தை

(இலண்டன்)

வட அயர்லாந்து சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைமை குறித்து, பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர், அயர்லாந்து பிரதமர் பெல்ற்றி எலகர் ஆகியோர் நேற்று முன்தினம் இலண்டனில் பேச்சுவார்த்தைகள் நடாத்தி உள்ளனர். (க-4)

## சேர்பியர் வதிவிடங்கள் மீது சரமாரியான ரொக்கட் தாக்குதல்

(லண்டன்)

கொசோவாவில் நேற்று முன்தினம் சேர்பியர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ரொக்கட்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

3 ரொக்கட்டுகள் ஏவப்பட்ட போதிலும் எவரும் உயிர் இழந்ததாகவோ அல்லது காயமடைந்ததாகவோ அறியமுடியவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

2ரொக்கட்டுகள் சேர்பிய மக்கள் செறிந்து வாழும் வடபகுதியின் மூடப்பட்ட கடைகள்மீது விழுந்ததாகவும் மற்றையது அல்பேர்னிய நகரின் தென்பகுதி விளையாட்டரங்கு ஒன்றில் வீழ்ந்ததாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை அண்மையில் கொசோவாவில் ஏற்பட்ட வன்முறைகளில் பல அல்பேர்னியர்கள் மற்றும் துருக்கியர் கொல்லப்பட்டதும், பாதுகாப்பு கருதிகொசோவாவில் இருந்து அல்பேர்னியர்கள் பலர் வெளியேறியது தெரிந்ததே.

(க-9)

ஒரிஸா, பீஹார்

# சட்ட மன்றத் தேர்தலையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள்

(புதுடில்லி)

நேற்றும் இன்றும் நடைபெறும்ஒரிஸா, பீஹார்மாநில சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவுகள் அமைதியான முறையில் நடைபெறுவதை ஒட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

அச் செய்திகள் மேலும் தெரிவிக்கையில்;

பீஹார் மாநிலத்தில் இடம் பெறும் வாக்குப் பதிவுகளின் போது இடையூறு புரிவோரை கண்ட இடத்தில் சுடுவதற்கு பீஹார் மாநில அரசு உத்தரவிட்டுள்ளதுடன், காவல் பணியில் ஈடுபட்டுள்ள படையினரை தீவிர உசார் நிலை பேணுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுள்ளது.

அத்துடன், இராணுவப் பொலிஸின் 125 படைப்பிரிவுகள் உட்பட துணை இராணுவப் பிரிவின் 400 பிரிவுகள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரிஸா மாநிலத்திலும் இதே போன்ற விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரிஸாவில் பயங்கரவாதிகள் நடமாட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகமாய் காணப்படும் 4 பிரிவுகளில் வாக்களிப்புகளை புறக்கணிக்குமாறு தீவிரவாதிகள் வாக்காளருக்கு அழைப்பு விடுத்திருப்பதைத் தொடர்ந்தே இவ்வாறு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. [க-9]

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு 15 கோடி 50 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கென 15 கோடி 50 இலட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை தெரிவித்துள்ளது.

பன்முக வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து, சென்ற வருடம் நாட்டின் சகல பாராளுமன்ற உறுப்பினர்க்கும் தலா 25 இலட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தொகை இவ்வருடம் 35 இலட்சமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் 50 இலட்ச ரூபாவை வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு - வரவு செலவுத் திட்டத்தில், ஏனைய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 25 இலட்சம் வழங்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 40 இலட்சம் வழங்கப்பட்டிருந்தது.

மீண்டும், கடந்த வருடம் ஏனைய பகுதிகளைப் போன்றே வடக்கு - கிழக்கிற்கு 25 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

இதேவேளை, வடக்கு - கிழக்கின் புனரமைப்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும், பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் முகமாகவே வடக்கு - கிழக்கிற்கு மேற்படி சலுகை வழங்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

(க-9)

## சுகாதாரப் பரிசோதகர்களாக மேலும் ஏழுபேருக்கு நியமனம்

[நீராவியடி]

1997/1998ஆம் ஆண்டுக்கான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள, பரீட்சையில் சித்தியடைந்த மேலும் ஏழு பேருக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு: எஸ். அருள்மாறன், எஸ். முரளீதரன், ஜி. கருணாநிதி எஸ். சுபேந்திரன், எஸ். பரமேஸ்வரன், எஸ்.குலேந்திரன், ஐ.இந்திரஜித்.

(78)

## வடக்கு - கிழக்கு உட்பட 16கோடி ரூபா பெறுமதியான கணனிகள் 624 பாடசாலைகளுக்கு வழங்கப்படும்

வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட நாடு பூராவுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கும், மற்றும் பிரதேச செயல்கங்களுடான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்குமாக 16 கோடி ரூபா செலவில் 1800 கணனிகளை கல்வி உயர்கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இக்கணனிகளை வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கணனிகள் இலங்கையில் உள்ள 305 தேசிய பாடசாலைகளுக்கும் மற்றும் பிரதேச செயலகங்களால்தெரிவு செய்யப்பட்ட 319 பாடசாலைகளுக்குமாக 524பாடசாலைகளுக்கு இவை வழங்கப்படவுள்ளன.

[ஆ]

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், இளைஞர் சிரம சக்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் கடந்த வருடம் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகளின் இளைஞர் கழகங்களிற்கு யாழ். மாவட்ட அலுவலகத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(க-75.)

## அச்சுவேலியில் வரதராஜப் பெருமாளுக்கு எதிரான சுவரொட்டிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பிரதேசத்தில் வரதராஜப் பெருமாளுக்கு எதிரான சுவரொட்டிகள் நேற்று முன்தினம்ஒட்டப்பட்டிருந்தன.

ஒட்டிய இச் சுவரொட்டியில் மூன்றாம் தர மத்தியஸ்தம் வேண்டாம். வரதராஜப்பெருமாள் ஆள்பிடிகாரன், ஆர் சேர்க்கின்றான் மூன்றாம் கட்ட பேச்சு ஏன்? என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

சுவரொட்டிகள் யாவும் அன்று மாலையே அகற்றப்பட்டதாக தெரிய வருகிறது.

(க-57)

## கசிப்பு உற்பத்தி சமூகத்திற்கு நாமே கொடுக்கும் விஷம்

### துண்டுப் பிரசுரத்தில் தெரிவிப்பு

(அச்சுவேலி)

''எமது சமூகத்தினை அழித்தும், சமூக குருதியை உயிருடன் குடித்தும் வரும் கசிப்பு ஒரு நஞ்சு. எமது சமூக மக்களுக்கு நாமே உற்பத்தி செய்து கொடுக்கின்ற விஷம்.

சமூக நலனுக்காக உயிர்கொல்லி நஞ்சை அகற்றுவோம்'' எனும் தலைப்பில், உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூக நிலையமும், உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையமும் இணைந்து வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுதாய நலன் விரும்பிகளே! பெற்றோர்களே! இளைஞர்களே! என விழித்து எழுதப்பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் இதனை உணர்ந்து தங்கள் மனதை மாற்றிக்கொள்ளாவிடில் எங்கேயோ ஓர் மூலையில் இது தனதுவேலையை தொடர்ந்த வண்ணமே இருக்கும். அதன் பாரிய விளைவை நாம் எல்லோரும் அனுபவிக்கவேண்டிய காலம் மிகத் தொலைவில் இல்லை. அத்தகைய காலத்தில் அந்த விளைவை நினைத்து ஏங்குவதை விட வருமுன் காப்பது சிறந்ததாகும்.

ஷெல்பொழிந்து யுத்தத்தால் வீடெரிந்துநாடெரிந்து போகிறதே! எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதா? இல்லை, எரியும் வீட்டை அணைத்து உயிர்களைக் காப்போம்.

தற்போது உற்பத்தியாக்கப்படும் கசிப்பு நவச்சாரம், இரும்புக் கம்பிகள், நுளம்புச் சுருள்கள். ஏனைய இரசாயனப் பொருட்கள், மற்றும் கோடாவிற்குள் விழுந்து இறக்கும் எலிகள், பாம்புகள் என்பனவற்றின் விஷங்களையும் கொண்டுள்ளதால் இது மனித உடலில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தி பல்வேறு நோய்களுக்கு காரணமாகி, இறுதியில் உயிரை எடுக்கிறது. இதை இல்லாதொழிப்போம். உயிரைக்காப்போம். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[க-57]

## வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோருக்கு வீடுகள் அமைக்கும் பணியில் 'கியுடெக்'

(புலோலி)

அகில உலக கரிதாஸ் நிறுவனங்களின் நிதி உதவியுடன் மனித முன்னேற்ற நடுநிலையம் (கியுடெக்) இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கும் வீடுகள் அமைக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை 66 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 34 வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சக்கோட்டையில் 20 வீடுகளும், திக்கத்தில் 21 வீடுகளும் பருத்தித்துறையில் 08 வீடுகளும் புத்தூரில் 16 வீடுகளும் பொலிகண்டியில் 01 வீடும் அமைக்கப்பட்டன.

மேலும் பருத்தித்துறையில் 08 வீடுகளும் அல்வாயில் 14 வீடுகளும் சக்கோட்டையில் 05 வீடுகளும் பொலிகண்டியில் 07 வீடுகளும் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மனித முன்னேற்ற நடுநிலைய (கியுடெக்) வடமராட்சி இணைப்பாளர் தெரிவித்தார்.

(க-52)

## க. பொ. த. உயர்தரத்திற்கான பொதுஅறிவுவினாக்கள்

### வினா இல - 01

★ பின்வரும் வினாக்களில் உலகில் மிகப் பெரியவை எவை என எழுதுக.

(1) மிக பெரிய நூலகம் ..................
(2) மிக ஆழமான கடல் ..................
(3) மிக பெரிய நீர்வீழ்ச்சி ........... .....
(4) மிக பெரிய தேவாலயம் ..............
(5) மிக உயர்ந்த அணைக்கட்டு ..... .........

★ பின்வரும் நாடுகளிற்கான தேசிய பறவைகள் எவை?

(6) இலங்கை ..................... ......
(7) பர்மா ........ .... ...........
(8) ஜேர்மனி .........................
(9) தென் ஆபிரிக்கா .......................
(10) அமெரிக்கா ...... . ................

★ பின்வரும் நூல்களை எழுதிய எழுத்தாளர் யார்?

(11) திருவாசகம் .. ..... ..................
(12) திருப்புகழ் ... ........ ..........
(13) கீதாஞ்சலி ............ ..........
(14) தேம்பாவணி .................... ...
(15) எனது போராட்டம் .......................

★ பின்வரும் பொருட்களைக் கண்டுபிடித்தவர் யார்?

(16) மின்குமிழ் ... ..............
(17) அச்சியந்திரம் ..................
(18 டைனமோ ..................
(19) தட்டச்சு இயந்திரம் ..................
(20) ரேடியம் ........... .....

★ ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தியுள்ள பின்வரும் தினங்களிற்கான நாட்கள் எவை?

(21) உலக மகளிர் தினம் .... ...........
(22) உலக சுகாதார தினம் .................
(23) சுற்றாடல் தினம் ...............
(24) வெள்ளை பிரம்பு நாள் ...............
(25) ஆசிரியர் தினம்
(26) சுரங்க ரயில் பாதை முதன் முதலில் எந்த நாட்டில் தொடங்கியது? .......................
(27) டெல்ப் எந்த நாட்டு நாடாளுமன்றம்? .........
(28) அமெரிக்க சுதந்திர போராட்டத்தின் கதாநாயகர் யார்?
(29) பிரான்சு புரட்சிக்கு பின் பிரான்சை ஆண்ட மன்னன் யார்? ........ ...... .....
(30) எந்தக் கண்டத்தில் பாலைவனம் இல்லை? ......
(31) அணிசேரா நாடுகளின் மகாநாடு இலங்கையில் எப்போது நடைபெற்றது? ....................
(32) இலங்கையின் முதல் தமிழ் பத்திரிகை எது? அது எந்த ஆண்டில் வெளியிடப்பட்டது? .........
(33) கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது? .................
(34) இலங்கையின் இந்து கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? ........ ............
(35) இலங்கையின் பஸ் போக்குவரத்து எத்தனையாம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டது? .........
(36) விமான கறுப்பு பெட்டி என்றால் என்ன? .........
(37) அமைதியின் சின்னமாக வெண்புறாவைவரைந்த உலக புகழ் பெற்ற ஓவியர் யார்? ..............
(38) மூலகங்கள் அணுவால் ஆனது என்பதனைக் கண்டுபிடித்தவர் யார்? ..................
(39) X கதிரைக் கண்டுபிடித்தவர் யார்? ...........
(40) விசர்நாய் கடியினால் ஏற்படும் நோய் எது? ......
(41) நைஜீரிய நாட்டு நாணயத்தின் பெயர் என்ன? ...
(42) இலங்கையின் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற ஆண்டு எது? .....................
(43) யப்பான் நடனச் சிறுமிகளை எவ்வாறு அழைப்பர்? .........................
(44) ஆஸ்திரேலியாவின் தேசிய மிருகமெனக் கருதப்படுவது எது? ...........
(45) கணனி உபயோகத்தை எளிமையாக்கிய மௌஸ் கருவி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது? ......................
(46) அன்னை தெரேசாவிற்கு நோபல் பரிசு கிடைத்த ஆண்டு எது? ................
(47) AIDS என்பதன் விரிவாக்கம் யாது? ..........
(48) ஐரோப்பிய பொருளாதார கட்டமைப்பு எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ? ..............
(49) மனிலா நகரில் எந்த ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் உள்ளது? ..............
(50) ஐக்கிய நாடுகளின் சர்வதேச நீதிமன்றத்தில் நீதிமன்றக் காரியாலயம் அமைந்துள்ள இடம் எது? ......................

தொகுப்பு- 'யூட்'

இவ் வினாக்களுக்கான விடைகள் யாவும் எதிர் வரும் வெள்ளிக்கிழமை வெளிவரும்.

யாழ்ப்பாணம்

அல்லற்பட்டு ஆற்றாது
அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை,

- குறள்

# வலம்புரி

## நேரிய பாதையில்

வளம்பெற வேண்டிய எங்கள் மரகதத்தீவின் தேசிய பொருளாதாரமே நைந்து கொண்டிருக்கிறது. வரவு எட்டணா செலவு பத்தாணா என்ற நிலையில் எங்கள் நாடு அவலப்படுகிறது. செலவும் தேவை கருதி செய்யப்படாது மெலியார் மேல் வலியார் ஏறி மிதிக்கும் பாணியில் யுத்தத்திற்காகச் செலவிடப்படுகிறது. யுத்த அனர்த்தங்கள் ஒருபுறம். சுரமென ஏறும் வரவு செலவுத் திட்டச்சுமை மறுபுறமாக மக்கள் துன்பப்படுகிறார்கள்.

வழமை போலப் பாதுகாப்புத்துறை நிதி ஒதுக்கீடு அதிகப்பட்டிருக்கிறது. துண்டு விழுந்துள்ள தொகையை ஈடு செய்யும் பணி சாதாரண மக்களின் தலைகளில்தான் விழுந்துள்ளது. நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பளுவின் மூல காரணம் இனப்பிரச்சனைத் தீர்வின் இழுபறி நிலைமைதான் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நாடு பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாத கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசியல் வாதிகள் இனவாதம், சந்தேகங்கள் போன்ற மனோவியாகூலங்களுக்கு அப்பாற்பட வேண்டும். ஜனாதிபதி தமது வரவு செலவுத் திட்ட உரையில் ''ஒவ்வொரு பிரஜைக்கும் சமவாய்ப்பை வழங்கும் எமது முயற்சிகள் ஆவலுடன் தொடர வேண்டும்'' என்றார். இன முரண்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வுகாண புதிய அங்கீகாரமொன்றை வேண்டி நிற்கிறேன் என இதயநாதட சேய்தார்.

இந் நிலையில் மூத்த அரசியல் வாதி ரொனி டிமெல் அரசியலமைப்பு சீர்திருத்தம் மூலம் இனநெருக்கடிக்கு தீர்வு காணும் அரசின் முயற்சிக்கு தடையாக இருக்கக் கூடாது. ஐ.தே.க ஜனாதிபதிக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

வாதங்கள் - வம்புகள் நாட்டுக்கு வேண்டாம். வேண்டுவது பொருளாதார சபீட்சம். நிம்மதியான வாழ்வு. உரிமை மறுக்கப்படாத வாழ்வு தன்னிலை தாழாத வாழ்வு. போரிலாப் பூமி புலர்ந்தால் பொருளாதாரம் மலரும்.

- அன்புடன் ஆசிரியர்

திம்பு பேச்சின் அடிப்படையிலேயே

# இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு முன்னெடுக்கப்படல் வேண்டும்

### ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. தெரிவிப்பு

[கொழும்பு]

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முன்னெடுப்பு நடவடிக்கையும் திம்புப் பேச்சு வார்த்தையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, எதிர்கட்சித் தலைவர் வெளிவிவகார அமைச்சர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் இனப்பிரச்சனை தீர்வு விடயம் தொடர்பாக பேசியமை குறித்து கருத்துக்கூறிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நோர்வே வெளிவிவகார அமைச்சர் அண்மையில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் அன்ரன் பாலசிங்கத்துடன் சந்தித்துப் பேசியமையும், ஜனாதிபதியை சமாதானப் பேச்சுக்களில் அண்மையில் சந்தித்தமையும் இணைப்பாளராக செயலாற்றும் அவர்களது முயற்சிக்கு இது ஓர் நல்ல ஆரம்பம் என்றே நான் கருதுகிறேன்.

எனவே விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளச் செய்வதற்காக தமிழினம் ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் தமிழர் தாயகமாகிய வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும், தமிழ் தேசிய இனம் பிரிந்து செல்ல வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற திம்புக் கொள்கையின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன் நாட்டு மக்களின் நன்மைகளை கருதி இரு தரப்பினரும் ஓர் விட்டுக்கொடுப்புடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதன் மூலம் சமாதானத்தை நிலைநாட்ட முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(க-7)

## பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இருந்து பயணம் செய்த பெண் ஒருவர் மயக்கமுற்று கீழே விழுந்து படுகாயமுற்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம்திருநெல்வேலிச்சந்தியில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த ரி. தவமணி (வயது 50) என்பவரே படுகாயமுற்ற நிலையில் யாழ், போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ந)

## இடம் மாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் வி.இராஜரட்ணம், வவுனியா நகர பிரதேசசெயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு, வவுனியாபிரதேசசெயலக காணி உத்தியோகத்தர் கே.ஞானசேகரம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

[க-52[

# சாதாரண உணர்ச்சிகள் கொண்ட ஜீவாத்மா தடுமாறும்போது பரமாத்மாவின் ஆதரவு உண்டு

அருச்சுனனை வில் அம்பு ஏந்திய வீரனாகவும், பகவான் கிருஷ்ணரை தேரோட்டுபவராகவும் வைத்து பகவத்கீதையின் தத்துவத்தை விளக்குவதன் பின்னணி என்ன என்பதையும, உலக இன்பங்களில் மனம ஈடுபட்ட அருச்சுனனை கீதோபதேசம் செய்ய பகவான் தேர்ந்தெடுத்தது என்ன பொருத்தம் என்பதையும் விளக்குகின்றார் மகான் அரவிந்தர்.

கடவுளும் மனிதனும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல் படுவதே வாழ்க்கையின் வெற்றி என்ற தத்துவத்தையே கீதோபதேசக் காட்சி விளக்குகின்றது. பிராத்தனையில் மட்டும் இன்றி, அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் கடவுள் நமக்குத் துணை நிற்கின்றார் என்பதையே அருச்சுனன் என்ற போர் வீரனுக்காகப் பகவான் தேரோட்டி யுத்தகளத்திற்குச் செல்லும் காட்சி நினைவுபடுத்துகிறது.

பகவான் கிருஷ்ண பரமாத்மாவையும், போரிடச் செல்லும் அருச்சுனன் ஜீவாத்மாவையும் நமக்கு உணர்த்துகிறார்கள். இதில் உள்ள ஏற்பாடு அருச்சுனன் ஆயுதம் ஏந்திப் போரிட்டு (நாம் வாழ்க்கையில் செய்வதைப் போல) தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; கடவுள் அந்தப்போராட்டத்தில் தானே ஆயுதம் தாங்கிப் போரிடாமல் துணையிருந்து (தம்முடைய வாழ்க்கையில் நடப்பதைப்போல) வழிகாட்டுவார் என்பது தான். சாதாரண உணர்ச்சிகளும் பலவீனங்களும் கொண்ட ஜீவாத்மா, மனக்குழப்பத்தால் வழி தடுமாறும் போது பரமாத்மாவின் துணையும் வழிகாட்டுதலும் அதற்குக் கிடைக்கிறது என்பதையே கீதோபதேசக் காட்சி காட்டுகிறது. இதில் மனிதன் தான் எப்படியோ தன்னுடைய குழப்பங்களை வென்று முன்னேற வேண்டும். முன்னேறும் அந்த வழிக்குப் பகவான் தேரை ஓட்டி நம்மை அழைத்துச் செல்லுகிறார். அவரே நம்மைக் காக்கும் கடவுள், குரு வழிகாட்டி யாவுமாக விளங்குகிறார்.

கடவுளை நம்பி; அவரிடம் நம்மை ஒப்படைத்து, அதே சமயம் நாம் நம்முடைய திறமையை முழுவதும் பயன்படுத்தி, மனம் தளராமல் செயற்பட வேண்டும். அப்போது பகவான் நமக்கு நண்பனைப்போல கூட வந்து, துணை இருந்து உதவுவார். நம்மை எதிர்த்து நாசமாக்கும் முயற்சியில் ஈடுபடும் சக்திகளை எப்படி வெல்லுவது என்பதை நமக்குச் சொல்லிக் கொடுத்து உணர்த்துவார். பகவான் கிருஷ்ணருக்கும் வீரன் அருச்சுனனுக்கும் இப்படி அடையாள பூர்வமாக ஓர் உறவை பகவத் கீதை நமக்குக் காட்டுகிறது.

தொகுப்பு கோண்டாவில் பரம்

# சைவ, வைஷ்ணவர்கள் அனைவருக்கும் பொதுவானது 'ஏகாதசி' விரதமே

### பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா

(நேற்று முன்தின தொடர்)

ஏகாதசிக்கு லீவுஇல்லையே சாப்பிடாமல் எப்படி வேலை செய்வது? பதினைந்து நாளுக்கு ஒருநாள் சாப்பிடாவிட்டால் தெம்பு குறையவே குறையாது, நாம் சாப்பிடவில்லையே. நமக்கு சக்தி இருக்காது என்று பயப்பட்டு அந்த பயத்தினாலேயே பல ஹீனத்தை வரவழைத்துக் கொள்வதாயிருக்குமே தவிர உண்மையில் அன்றைக்கு நம் மனதை உடம்பில் இருந்து சிறிது ஒதுங்கி இருந்தால், அன்றுதான் கூடுதலாக சக்தி, உற்சாகம்எல்லாம் இருப்பதாகத் தெரியும். மற்ற தினங்களை விடவும் அன்றுதிறமையாக நிறையவேலை செய்ய முடியும். மனமிருந்தால் வழியுண்டு. உடம்புக்கு பல தோசங்களிருந்தாலும் அதற்கு ஒரு பெரிய குறை உண்டு. அதாவது நாம் பழகுகின்றபடி கேட்கும். அதனால் தொழில்செய்ய முடியாதபடி ஏகாதசி உபவாஸம் எவரையும் கஸ்ரப்படாமல் பழகிக் கொண்டு விடலாம். பசிஎடுத்தாலும் பட்டினி இருந்து பழகு.

'' ங்கனம் பரம ஔஷதம்'' என்றுவைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. எங்கனம் என்றால் பட்டினிஎன்று அர்த்தம்: வைத்திய சாஸ்திரம் கூறும் லக்கனத்தையே மத நூல்களும் கூறுகின்றன. ஏற்கனவே சாப்பிட்டது முழுவதும் ஜீரணமாகிவிட்டதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகே ஒருவன் மறுபடி உண்பானானால் அப்படிப்பட்டவனுடைய உடம்புக்கு மருந்துஎதுவும் வேண்டாம் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்.''

சாப்பாட்டினால் தான் ஆரோக்கியம் என்று நாம் நினைத்தாலும் வியாதிக்கு அதுதான் முதல்தோழன், காய்ச்சல்வந்தவுடன்டாக்டர் முதல் காரியமாக என்ன கூறுகின்றார்) சாப்பாட்டை நிறுத்து, சோறுசாப்பிடாதே, கஞ்சிகுடி இல்லாவிட்டால் இன்னபானம் சாப்பிடு என்றுதானே கூறுகின்றார். எந்தநோயானாலும் அதற்கு பத்தியமாக என்ன சாப்பிடக் கூடாது? என்றுதான் முக்கியமாகக் கூறுகின்றார். முக்கியமாக கூறுவதில் இருந்த வியாதிக்கு ஆதாரம் ஆகாரம் தான்என்று தெரிகின்றது. இப்படி சரீரரீதியில் ஆரோக்கியத்திற்கு நன்மை செய்கின்ற பட்டினியே அதைவிட ஆத்மீகமாக நல்லது செய்கின்றது. இதனால்தான் நடுநடுவே சுத்தப்பட்டினி விதித்திருக்கிறது.

காந்திகூட ஆத்மசாந்திக்காகவே தான் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லி அடிக்கடி பட்டினிகிடந்தார். அந்தசமயங்களிலே தமக்குப் புத்தியிலே ஒருதெளிவு ஏற்பட்டதாகவும் மனதில் சுத்தம் உண்டானதாகவும் சொல்லியிருக்கின்றார்.

இப்படியாக உடல் நலத்தோடு உயிர் நலத்தையும், இம்மையொடு மறுமையையும் சேர்த்து ஆன்றோர்கள் உபவாஸ விதிகளைத் தந்திருக்கிறார்கள். இவற்றை முறைப்படி பின்பற்றி யோக மோட்சங்களை அடைவோமாக.

ஏகாதசியைகைக்கொள்ளப் பண்ண வேண்டும். ரொம்பவும் போற்றிப் பின்பற்றப்பட்டு வந்த இந்த மஹாதர்மம் இரண்டு மூன்று தலைமுறைகளாக குறைந்து போயிருக்கின்றது. இன்றைக்கு எங்கேயோ ஒருவர் இருவர் உபவாஸம் செய்வதால் இந்த மட்டுமாவது மழை பெய்து கொண்டுள்ளது.

இந்த விரதத்தைக் கார்த்திகை மாதப் பூர்வபக்க ஏகாதசியை முதலாகக் கொண்டும் அநுட்டித்தல் வேண்டும். இக் காலத்தில் இவ் விரதம் மார்கழி மாதப் பூர்வ பக்க ஏகாதசியை முதலாகக் கொண்டும் அநுட்டிக்கப்பட்டு வருகிறது. இவ் விரதத்தை முறைப்படி அநுட்டித்தால் வறுமை, பிணி என்பன நீங்கும் கல்வி, அறிவு, வீரம், செல்வம் என்பன ஓங்கும். இகபரம் என்பன இரண்டும் சித்திக்கும்.

(க)

# முத்திரைச் சந்தியில் 3 இளைஞர்கள் படையினரால் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கடந்த 16 ஆம் திகதி முத்திரைச் சந்தியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்தவர்களான குலேந்திரன் கௌரிதாசன், விக்கினேஸ்வரன் சுதாஸ்கரன்(22வயது) பாக்கியநாதன் விஸ்ணுகாந்தன் ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுள் பாக்கியநாதன் விஸ்ணுகாந்தனுக்கு படையினரால் கைது செய்யப்பட்டதற்கான ரசீது வழங்கப்படவில்லையென அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையீடு செய்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டதையடுத்து பிரஸ்தாப நபருக்கு ரசீது வழங்கப்படும் என இராணுவ அதிகாரியால் உறுதி வழங்கப்பட்டது. (க)

## கூரேயின் பிரஜைகள்'முன்னணிக்'கட்சியை பதிவு செய்யும் ஆவணங்கள் ஒப்படைப்பு!

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுசெயலாளர் சிறிசேன கூரேயினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரஜைகள் முன்னணி என்ற புதிய கட்சியைப்பதிவு செய்வதற்கான ஆவணங்கள் நேற்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இக் கட்சியின் தேசிய அமைப்பாளராக கூரே இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே எதிர் வரும் சகல தேர்தல்களிலும் இக் கட்சி போட்டியிடும் என்றும் மனித உரிமைகள், ஜனநாயகம் என்பவற்றை இக் கட்சி பாதுகாக்கும் என்றும் கூரே தெரிவித்துள்ளார். (ந-7)

## மடுவில் தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்!

(வவுனியா)

மடுகல்வி வலயத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்களால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக தொண்டராசிரியர்களாக கடமையாற்றும் 109 ஆசிரியர்களையும் நிரந்தரமாக்கக் கோரியே இவ் ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

மடு வீடமைப்புச் சந்தியிலிருந்து ஆரம்பமான இவ் ஊர்வலம் பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தில் முடிவடைந்தது.

பல காலமாக இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காகஉழைத்த தங்களை நிரந்தரமாக்க வேண்டும் எனக்கோரும் மகஜர் ஒன்று வடக்குக்கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அம் மகஜரின் பிரதிகள மடு ஆயர் மற்றும் மடு உதவி அரச அதிபர் ஆகியோரிடமும் கையளிக்கப்பட்டது. [103]

**அறுபத்தேழு...**

னைக் கடத்திச் சென்றதாகவும் பின்னர் அவர்கள் தன்னை விடுவித்ததாகவும் தெரிவித்தார். (வ)

**இளைஞன்...**

கே. றஞ்சன் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவ் இளைஞனை விடுதலை செய்வித்தார். (ந)

**தென்மராட்சிப்..**

மடைந்த நால்வரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ந]

**கிராண்ட்பாஸ்...**

அவர்களை விடுவிக்குமாறு கோரியுள்ளதுடன் இது சம்பந்தமாக தொல்லைதவிர்ப்புக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளார். (வ)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
பிரபுதேவா, ரோஜா
நடித்த
ஏழையின் சிரிப்பில்
(புதிய வெளியீடு)
10. 30, 2. 30 (ப.நே)
வெட்டுப்படாத
முழுமையான நேரடி
CD யில் காண்பிக்கப்படும்
மகளிருக்கு இடமுண்டு
(00115)

**சமாதானப்...**

உருவாக்கும் பணியில் ஈடுபட தமது அரசு ஒப்புக்கொண்டிருப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் கெநட் வொலிபேக் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை வந்து திரும்பிய வொலிபேக் தனது இலங்கை விஜயம் தொடர்பாக நோர்வேயில் விடுத்த அறிக்கையில் மேற்சண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை ஜனாதிபதியுடன் இது விடயமாகத்தான் பேச்சு நடத்தியதாகவும் இந்தப் பிரச்சனைகளுக்கு அரசியல் வழிமுறை மூலம் தான் தீர்வுகாண முடியும் என்றும் அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டியுள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் வேண்டுகோளின் பேரிலும் விடுதலைப்புலிகளின் விருப்பத்தின் பேரிலும் பேச்சுக்கான சூழலை உருவாக்கும் கடுமையான பணியை நோர்வே அரசு எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்.

விடுதலைப் புலிகளின் தமிழீழத் தாயகம் என்ற கோட்பாட்டுக்கும், நாட்டைத் துண்டாடுவதற்கு அரசின் எதிர்ப்புக்கும் இடையில் இணக்க நிலையை ஏற்படுத்துவது என்பது கடினமான ஒன்று - இந்நிலையில் அரசியல் வாதிகளினது தியாக உணர்வும், ஆர்வமுமே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழிவகுக்கும் எனவும் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது மன்றி மன்றி சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பிடமும் நம்பிக்கையை ஏற்படுத்துவதில் நோர்வேயின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ப)

## புலிகள் தரப்பில் மூவர் உயிரிழப்பு

[வவுனியா]

கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான வீரவேங்கைகள்.

★ தாரகன் (சிறிரங்கன் தயாளன்)

★ தனுப்பிரியன் (வேணுகான்) ஆகியபோராளிகளும்.

16ஆம் திகதி அரியாலையில் ஏற்பட்ட மோதலில்

★ தூயவன் (றொபேர்ட் கெனடி) முரசு மோட்டை என்ற போராளியும் மரணமானதாக புலிகள் அறிவித்துள்ளனர். (வ-103)

## முஸ்லிம் காங்கிரஸ்எம்.பி இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அத்தித பெரேரா தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தேசியப் பட்டியல் எம்.பியான இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னேற்றத்திற்காகப் பாடுபடப் போவதாக அறிவித்துள்ளார். (4)

## தனங்களப்பில் நெல் அறுவடை

தனங்களப்பு வீதிக்கு மேற்காக உள்ள வயற்பகுதிகளில் மக்கள் நெல் அறுவடையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 8ம் திகதி அறுவடைகளை ஆரம்பித்த போதிலும் குண்டுச் சத்தங்களினால் ஏற்பட்ட பீதியினால் வேலைகள் தாமதமடைந்திருந்தன.

தற்போது அறுவடைக்கான பிரதேசங்களின் பரப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய சூழ்நிலையால் விவசாயிகள் அங்கு செல்லத்தயங்குவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (க-21)

## இலட்சார்ச்சனை

(இணுவில்)

இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில், சென்ற 9 ஆம் திகதி தொடக்கம் தினமும் 4.00 மணியில் இருந்து அம்பிகைக்கு இலட்சார்ச்சனை பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

**யுத்தக்..**

மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும் என்றும் கைதிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை உண்ணாவிரதிகளைப் பார்வையிடுவதற்கு கைதிகளின் பெற்றோர் பாதுகாவலர்கள் அரசிடம் அனுமதி கோரிய போதும் அவர்கள் வன்னி செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-103)

## மண்டூர்ப் பகுதியில் குண்டு வீச்சு ஒருவர் பலி ஐவர் படுகாயம்!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மண்டூர்ப் பகுதியில் இடம்பெற்றகுண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் முன்னாள் ராஸிக்குழு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் படுகாயமுற்றனர்.

இச்சம்பவத்தில் எவ். இராஜேந்திரன் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வயலில் வேலை முடித்து விட்டு உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் வீசப்பட்ட குண்டு வீச்சின்போதே இவர் கொல்லப்பட்டார்.

இவரது மனைவி மாமியார் உட்பட ஐவர் காயமடைந்தனர். இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

## உமையாள்புரத்தில் இடம்பெற்ற சமரில் இருபத்தேழு போராளிகள் உயிரிழப்பு!

கடந்த 16ஆம் திகதி புதன் கிழமை உமையாள் புரத்தில் தாம் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் தமது தரப்பில் 27 போராளிகள் மரணமடைந்ததாக புலிகளின் குரல்வானொலி தெரிவித்துள்ளது.

இத்திடீர்த்தாக்குதலில் 700 மீற்றர் நீளமான தொடர் காவலரண்களைக் கைப்பற்றி அழித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-103)

## மட்டக்களப்பு சிறைக் கைதிகள் களுத்துறைச் சிறைக்கு இடமாற்றம்

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 53 கைதிகளில் இருபது கைதிகள் பாதுகாப்பின் நிமித்தம் நேற்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவத் தொடர்வாகனம் பாதுகாப்பு வழங்க இக் கைதிகள் களுத்துறைச் சிறைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தற்போது 3 பெண்கள் உட்பட 33 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ந)

## அம்பாறை சிறைக் கைதி ஒருவர் விசாரணையின் பின் தப்பியோட்டம்

(ஏறாவூர்)

அம்பாறை சிறைச் சாலையிலிருந்து அக்கரைப்பற்று நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட கைதி ஒருவரை நீதிமன்ற விசாரணையின் பின் மீண்டும்அம்பாறைச்சிறைக்கு அழைத்துச் செல்லும் போது தப்பியோடிய சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இராணுவ சேவையிலிருந்து தப்பியோடிக் கடந்த ஜனவரி மாதம்கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டச.ராஸிக்என்ற கைதியே இவ்வாறு தப்பியோடியவராவார்.

## இலவச கண்பரிசோதனை

தாவடி வடக்கு மகளிர் சுகாதார நிலையத்தில் லயன்ஸ் கழகம் இலவச கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை மற்றும் இரத்த அழுத்தப்பரிசோதனை ஆகியவற்றை மேற்கொள்ளவுள்ளது.

இப்பரிசோதனையானது நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறுமென ஆர். கருணாகரன் தெரிவித்துள்ளார்.

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தகவல் தொழில் நுட்பத்திற்கான சர்வதேச 'ஒலிம்பியர்' போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கணனித்துறை சார்ந்த இப் போட்டிகள்செப்ரெம்பர் மாதம் சீனத் தலைநகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் திகதிக்குப் பின் பிறந்த மாணவர்கள் இப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் இல.9, கில்பெத் மாவத்தை கொழும்பு - 3 என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். (ந)

## காணவில்லை

அல்வாய் கிழக்கு தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரை கடந்த 11ம் திகதியில் இருந்து காணவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கந்தசாமி சத்தியராசா (வயது 27)என்பவரே கடந்த 11ம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டவர் இதுவரை வீட்டுக்குத் திரும்பவில்லையென அவரது மனைவியான சத்தியராசா இதயராணி மந்திகையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ந)

## மெய்வல்லுநர் போட்டி

யா/மானிப்பாய் மெமோறியல்ஆங்கில பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி அதிபர் திருமதி ச. யோகேஸ்ரன் தலைமையில் நாளை சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கலந்து கொள்வார்.

பாராட்டுகின்றோம்
அராலியூர்
ரதாதி நாதஸ்வர சிற்ப கற்பக
சின்னத்தம்பி அமரசிங்கம்
அவர்களது கலைப்பணியைப் போற்றி பாராட்டி
அவர் பணி சிறக்க வாழ்த்தி மகிழ்கின்றோம்.
அகில இலங்கை விஸ்வகர்மகுலசங்கம்.
(00173)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.